### சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

## வழக்கு எண். MCOP 73/2013 - RW1

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் நாள் புதன்கிழமை

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எ.ம.சா.1 இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873 ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.R.இளவரசி, எழுத்தர் நிலை-II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி கண்ணன் | தொழில் | Dty Manager, HDFC Ergo General Insurance Company Ltd., |
| தந்தை பெயர் | ரங்கன் | ஜாதி | |
| கிராமம் | கிண்டி | சமயம் | |
| தாலுக்கா | சென்னை | வயது | 25 |

**24.09.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 2 ம் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமளிக்க எனக்கு அங்கீகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, TN 25-AY-9077 என்ற ட்ராக்டருக்கான Policy எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் அசல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது, 2 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் TN 25-AY-9077 என்ற டிராக்டர் விபத்து சமயத்தில் எங்களுடைய நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் இளவர் குழந்தை என்றால் சரிதான். இளவர் குழந்தை என்பதால் எது சரி, எது தவறு என்று அந்த குழந்தை முடிவு செய்ய இயலாது என்றால் எனக்கு தெரியாது. விபத்தில் இறந்த குழந்தையானது டிராக்டருக்கு சம்பந்தமில்லாத 3 ஆம் நபர் என்றால் டிராக்டரில் Unauthorised ஆக பயனம் செய்த நபர் ஆவார்.

2. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு 3 ம் நபருக்கான காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்து ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் எற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயம் விபத்தை ஏற்படுத்திய வாகனம் எங்கள் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்த விதத்திலும், விபத்து வாகனத்தின் உரிமையாளருக்கும், காப்பீடு நிறுவனத்திற்கும் உள்ள ஒப்பந்தம் பற்றி விபத்தில் இறந்த 3 ம் நபருக்கோ, அல்லது அவரது பெற்றோருக்கோ தெரிய வாய்ப்பில்லை என்பதால் 2 ம்

நபரான உங்களது காப்பீடு நிறுவனத்தில் செய்யப்பட்டிருந்த விபத்து வாகனத்தின் காப்பீட்டு விதிமுறை மீறப்பட்டிருந்தால் இறந்த நபர்களுக்கான இழப்பீட்டினை 2ம் நபரான உங்களது காப்பீடு நிறுவனம் செலுத்திவிட்டு, காப்பீட்டு ஒப்பந்தத்தை மீறி செயல்பட்ட விபத்து வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து நாங்கள் வசூலித்துக்கொள்ளவேண்டுமே தவிர இழப்பீடு வழங்கமுடியாது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. காப்பீடு விதிமுறை மீறப்பட்டிருந்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க தேவையில்லை.